# தூய லூர்து அன்னை திருப்பீடம்

CHURCH OF OUR LADY OF LOURDES

தூய லூர்து அன்னை ஆலயம், 50 ஒ.ஃபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி எண் 6294 0624

நாள் 06 - 08 - 2017 இதழ் 37

## திருப்பலி நேரங்கள்

**வாரநாட்களில் - ஆங்கிலம்**

திங்கள் முதல் வெள்ளி வரை மதியம் 12:30
மற்றும் மாலை 6:30மணி

**சனி** மாலை 6:00மணி
மற்றும் மாலை 7:30மணி

**ஞாயிறு (ஆங்)** காலை 7.30மணி,11.30மணி
மற்றும் மதியம் 1:00மணி

**ஞாயிறு (தமிழ்)** காலை 9:30மணி
மற்றும் மாலை 6:30மணி

**பொது விடுமுறை** காலை 9:00மணி (ஆங்)
காலை10:00மணி(தமிழ்)

**சகாய அன்னை நவநாள் மற்றும் செப வழிபாடு**

ஆகியவை ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 8:00 மணி முதல் 9:00 மணி வரை தமிழில் நமது ஆலயத்தில் நடைபெறுகிறது. செப உதவி தேவைப்படுவோர் கலந்து கொள்ளவும்.

(முதல் ஆண்டு)

# பொது காலம்

# 18ஆம் ஞாயிறு

## ஆண்டவரின் தோற்றமாற்றம்

**முதல் வாசகம் :**
தானி : 7:9-10,13-14

**பதிலுரைப் பாடல் :**
திபா : 97:1-2.5-6.9

**பல்லவி :** உலகனைத்தையும் ஆளும் உன்னதராம் ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்.

**இரண்டாம் வாசகம்:** 2 பேதுரு 1:16-19

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:**
“அல்லேலூயா, அல்லேலூயா!
என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன் அல்லேலூயா.”

**நற்செய்தி வாசகம்:** மத்தேயு 17:1-9

## வழிபாட்டு நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| விவிலியப் பகிர்வு | ஞாயிறு | காலை 11:30மணி | (தமிழ்) |
| செபமாலை, லூர்து மாதா நவநாள் | முதல் ஞாயிறு | காலை 8:30மணி | (தமிழ்) |
| மரியாயின் சேனை | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| குழந்தை இயேசு நவநாள் | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| இறை இரக்கச் செபம் | செவ்வாய் | மாலை 5:45மணி | (ஆங்) |
| குழந்தை இயேசு நவநாள் | வியாழன் | மாலை 5:45மணி | (ஆங்) |
| இறை இரக்கச் செபம் | வெள்ளி | மாலை 5:45மணி | (தமிழ்) |
| திருமணி ஆராதனை வழிபாடு தொடர்ந்து திருப்பலி | முதல் வெள்ளி | மாலை 6.30மணி | (ஆங்) |
| திருஇருதய நவநாள் செபம் & திருப்பலி (முதல் வெள்ளி தவிர) | வெள்ளி | மாலை 6:30மணி | (ஆங்) |
| புனித பியோ செபவழிபாடு | மா.தின் 23ம் நாள் | மாலை 8:30மணி | (தமிழ்) |
| சாட்சிய கூடார செபவழிபாடு | முதல் ஞாயிறு | மதியம் 2:00மணி | (தமிழ்) |

## இரண்டாவது காணிக்கை

இவ்வார இரண்டாவது காணிக்கை புனித வின்சென்ட் தே பவுல் சபைக்காக எடுக்கப்படும். உங்கள் காணிக்கைக்கு மிகவும் நன்றி.

## வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை ஆண்டுப் பெருவிழா - 2017

ஆண்டுதோறும் நமது தூய லூர்து அன்னை ஆலயத்தில் நடைபெறும் வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னையின் ஆண்டுப் பெருவிழா இந்த ஆண்டும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

10-09-2017, ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு பெருவிழாத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருச்சுரூபத் தேர்ப்பவனியும் நடைபெறும்.

**அனைவரும் வருக!**
**வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னையின் ஆசீர் பெறுக!**

இன்றைய நவநாளை சிறப்பிப்போர்: புனித லூர்து அன்னை ஆலயம்.
அடுத்தவார நவநாளை சிறப்பிப்போர்: கிறிஸ்து அரசர் ஆலயம்.
**வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை திருவிழாவை சிறப்பாகக் கொண்டாட, தாராள உள்ளத்தோடு நன்கொடை கொடுத்து உதவ வேண்டுகின்றோம். உங்களின் நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் கொடுத்து உரிய ரசீதைப் பெற்றுக் கொள்ளவும்.**



**திருவிழா நாளன்று தருப்பலி கருத்துக்கள் எழுதி வாசிக்கப்படும்.**

### அன்னை மரியாளின் விண்ணேற்பு பெருவிழா

. திருப்பலி நேரங்கள்
தேதி : திங்கள், 14-08-2017
நேரம் : மாலை 6:30மணி (ஆங்கிலம்)

தேதி : செவ்வாய், 15-08-2017
நேரம் : மதியம் 12:30மணி (ஆங்கிலம்)
மாலை 6:30மணி (ஆங்கிலம்)
இரவு 8:00மணி (தமிழ்)

### பொது விடுமுறை திருப்பலி நேரம்

தேதி : புதன், 09-08-2017
நேரம் : காலை 9:00மணி (ஆங்)
காலை10:00மணி(தமிழ்)

*பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை

*ஆலயத்தின் நுழைவு வாயில் இரும்பு கதவுகள் (Main Gates) மதியம் 12 மணி முதல் மூடப்பட்டிருக்கும்.

புனித லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**நமது பங்கில் மாதத்தின் ஒவ்வொரு முதல் ஞாயிற்றுக்கிழமையும் தமிழில் திருமணி ஆராதனை வழிபாடு நடைபெறுகிறது. இன்று 06-08-2017 மாலை 4.45 மணிக்கு நடைபெறும்.**

**நம் குடும்பங்களை திரு இருதய ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கவும், தேவ அழைத்தலுக்காகவும், உலக அமைதிக்காகவும் செபிக்க, இறைவனின் திருப்பாதத்தில் அமர உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**



## சிந்தனை

அன்புடையீர்,
இன்று ஆண்டின் பொதுக்காலம் 18ஆம் ஞாயிறு. இயேசுவின் தோற்ற மாற்றம் விழாவில் கலந்து கொண்டு இயேசுவைப்போல் நாமும் மாட்சிமை மிகுந்த மாற்றம் அடைய விரும்பி இவ்வாலயதிற்கு வருகை தந்துள்ள அனைத்து இறைமக்களையும் அன்புடன் இனிதே வரவேற்கிறோம். இன்றைய நற்செய்தி நிகழ்வான இயேசுவின் தோற்றமாற்றத்தைப் பற்றி எல்லா நற்செய்தியாளர்களும் இயேசு எருசலேம் செல்லும் வழியில் இந்நிகழ்வு நடந்ததாகவும் இயேசு தம் பாடுகளை முன் அறிவித்த பின்பு இந்நிகழ்வு நடந்ததாகும் கூறியிருப்பது சற்றுக் கவனிக்க வேண்டிய ஒன்றாகும். துன்பத்தின் முடிவில் இன்பம் உள்ளதை இத்தோற்றமாற்ற நிகழ்வு நமக்கு வெளிப்படுத்துகின்றது. சிலுவையின்றி உயிர்ப்பு இல்லை. அதுபோல் துன்பம் இன்றி மகிழ்ச்சி இல்லை.

இயேசு எந்த அளவுக்கு இறைத்தன்மையோடு விளங்கினாரோ அதே அளவு மனிதத் தன்மையோடு விளங்கினார். நமக்கு இருக்கும் அனைத்து உணர்வுகளும், உணர்ச்சிகளும் அவருக்கு இருந்தன. அவரும் தன் வாழ்வில் ஒரு சராசரி மனிதனாக இன்பத் துன்பங்கள், வேதனைகள், சோதனைகள், மனக்குழப்பம், விருப்பு வெறுப்புகள் என்று அனைத்தையும் எதிர்கொண்டார். இயேசு தந்தையோடு செபவாழ்வில் ஒன்றித்திருந்ததே அவரின் வெற்றிக்குக் காரணம். எனவே நாமும் இத்தைகைய செப உறவில் தந்தையோடு நிலைத்திருந்து இயேசுவின் பாதையில் வழி நடந்திட இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**

# சிங்கப்பூர் உயர் மறைமாவட்டம்
# தமிழ் திருப்பலி நடைபெறும் நேரங்களும் இடங்களும்

| | | |
|---|---|---|
| புனித லூர்து அன்னை ஆலயம்<br>50 ஓபியர் ரோடு | : | ஞாயிறு காலை 9.30<br>ஞாயிறு மாலை 6.30<br>பொது விடுமுறை நாட்கள் காலை 10.00 |
| உயிர்த்த ஆண்டவர் ஆலயம்<br>91 தோ பா யோ சென்ட்ரல் | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மதியம் 4.00 |
| புனித பிரான்சிஸ் அசிசி ஆலயம்<br>200 பூன் லே அவின்யூ | : | மாதத்தின் முதல் ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் ஐந்தாவது ஞாயிறு மாலை 7.30 |
| புனித அந்தோணியார் ஆலயம்<br>25 உட்லாண்ட்ஸ் அவின்யூ 1 | : | மாதத்தின் முதல் சனி மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது சனி மாலை 7.30 |
| நற்கருணை ஆலயம்<br>1, காமன்வெல்த் டிரைவ் | : | மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.00 |
| நட்சத்திர மாதா ஆலயம்<br>10, ஈசூன் 22வது தெரு | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 6.30<br>மாதத்தின் மூன்றாவது சனி மாலை 6.30 |
| கிறிஸ்து அரசர் ஆலயம்<br>2221, அங் மோ கியோ அவின்யூ 8 | : | மாதத்தின் நான்காவது ஞாயிறு மாலை 6.30 |
| சம்மனசுகளின் இராக்கினி ஆலயம்<br>5, புக்கிட் பாதோக் அவின்யூ 2 | : | மாதத்தின் நான்காவது சனி மாலை 8.00 |
| புனித அன்னாள் ஆலயம்<br>66, செங்காங் ஈஸ்ட் வே | : | மாதத்தின் முதல் ஞாயிறு மாலை 7.30 |

**அருள்தந்தையர்**


அருள்தந்தை மைக்கேல் சீத்தாராம் (frmichaelsitaram@gmail.com) - பங்குத்தந்தை
அருள்தந்தை தே. நித்திய சகாயராஜ் (nithiya@catholic.org.sg) - உதவிப் பங்குத்தந்தை
அருள்தந்தை பால் இயோ (fryeopaul@gmail.com) - உதவிப் பங்குத்தந்தை


இணையதள முகவரி: http://www.tamilcatholic.org.sg; http://facebook.com/ChurchOfOurLadyOfLourdesSingapore

அன்புப் பங்குமக்களே! தாங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே உங்கள் கைத் தொலைபேசியை அணைத்து வைக்குமாறும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.